# பண்புகளை இழக்கும் பகிடிவதை

M.A.Hafeel Salafi

**அறிமுகம் :**

கல்வி (Education) என்பது உடல், மன வளர்ச்சியில் அறிவு, நல்லொழுக்கம் ஆகிய மதிப்புடன் உயர்வு பெற உதவும் ஒரு சமூக அமைப்பு என கல்வியாளர்கள் கூறுகின்றனர். இளைய தலைமுறையினரை முறையாக வழி நடத்துவதிலும், சமுதாயத்திற்காக ஆக்கத் திறன் மிக்க பங்களிப்புச் செய்ய வைப்பதிலும் கல்விக்கு முக்கிய பங்குள்ளது. "கல்வி என்பது தகவல்களைச் சேகரிப்பதல்ல, அது சிந்திப்பதற்காக மூளையை பயிற்றுவிப்பது" என்று ஆல்பர்ட் ஐன்ஸ்டீனின் கருத்தாகும்.

விலங்கிலிருந்து மனிதனை அவன் பெற்றுள்ள பகுத்தறிவும் கல்வியும்தான் வேறுபடுத்திக் காட்டுகிறது. மனிதனுக்கு தனிச் சிறப்பையும் அந்தஸ்தையும் அவன் பெற்றுள்ள அறிவுதான் வழங்குகிறது. எனினும், மனிதன் அவனது அறிவைப் பிரயோகிக்க மறுக்கும் சில இழிந்த நடவடிக்கைகளால் ஐந்தறிவை மட்டும் பெற்றுள்ள விலங்கினங்களைவிட மோசமாக நடந்து கொள்கின்றான். அறாவது அறிவை அவன் இழந்து, மேற்கொள்ளும் அவனது நடவடிக்கைகளில் ஒன்றாகவே பகிடிவதை என்பதை பண்பாடுள்ளவர்கள் நோக்குகின்றார்கள். ஏனெனில், பல்கலைக்கழகங்களின் வரலாற்றை நோக்கும் போது, பகிடிவதையினால் பல நூறு பாதிப்புக்களும் சில உயிரழப்புக்களும் ஏற்பட்டுள்ளன என்பதற்கு ஏராமான சான்றுகள் உள்ளன.

பாடசாலைக் கல்வியை பலவித இன்னல்களுக்கும், வறுமைக்கும், சவால்களுக்கும், பிரச்சினைகளுக்கும், போட்டிகளுக்கும் மத்தியில் வெற்றிகரமாக முடித்து விட்டு, எதிர்கால இலட்சியக் கனவுகளையும், ஆவல்களையும், வேட்கைகளையும் மனதிற் சுமந்து பட்டப்படிப்பிற்காக மாணவர்கள் பல்கலைக்கழகம் நுழைகின்றனர்.

ஏராளமான எதிர்பார்ப்புகளோடு விடைகொடுக்கும் தாய் தந்தையை, உற்றார், உறவினவர்களை, பாசமாய்ப் பழகிய நேசர்களைப் பிரிந்து பிறந்த மண்ணை விட்டு, சுவாசித்துக்கொண்டிருந்த சுகந்த காற்றைவிட்டு, நடமாடிய தெருக்களை விட்டு, தனிமைப்பட்டு விட்டேன் என்ற கவலை உணர்வோடு, புதியவனாய்ப் பல்கலைக்கழகம் (UNIVERSITY) நுழைகின்றவனை மேலும் வாட்டி, வதைக்கிறது பகிடிவதை என்ற மனித வதை. பெறுமதிமிக்கப் பல உயிர்களைக் குடித்து, கல்வி நடவடிக்கைகளிலும் ஒழுக்க நடவடிக்கைகளிலும் பல்வேறு பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளமை, 'பகிடிவதை' தொடர்பான ஆய்வுகள் மூலம் தெரிய வந்துள்ளது.

"எல்லோருக்கும் கல்வி, வாழ்வதற்குக் கல்வி, கல்வி இல்லாமல் வாழ்வு இல்லை என்ற கோஷங்களுக்கு மாறாக, இன்று கல்வித் துறையில் கீழ்த்தரமான செயற்பாடுகள் காணப்படுகின்றன. மொட்டுக்களாக மிளிர்கின்ற பல்கலைக்கழக மாணவர்கள் இள வயதிலேயே வாழ்வுக்குப் பிரியாவிடை கூறும் சம்பவங்களும் அதிகரித்துள்ளமை கவலையளிப்பதாக உள்ளது.

பல்கலைக்கழகம் என்பது, பல கலைகளையும் மாணவர்கள் கற்கும் இடமாகும். பெற்றோரின் கட்டுப்பாடு இன்றி, விரிவுரையாளர்களின் கட்டுப்பாடு இன்றி ஆண் பிள்ளைகளும் பெண் பிள்ளைகளும் சுதந்திரமாகக் கல்விபெறும் இடம் பல்கலைக்கழகம். பல்கலைக்கழகம் செல்லும் மாணவர்கள், ஒரு பிரதேசத்திலிருந்து, ஒரு நாட்டிலிருந்து மட்டும் கற்க வருபவர்கள் இல்லை. பல பாகங்களில் இருந்தும் பல்வேறுபட்ட சமூக, கலாசார, வாழ்வியல் நிலைக்குட்ட சூழ்நிலைகளில் இருந்தே வருகின்றனர். எனவே, மாணவர்களின் சுபாவங்களும் பல்வேறு வகைப்பட்டதாக இருப்பதில் வியப்பில்லை.

தான் வாழும் சமூகத்தின் ஓர் எல்லைக் கட்டுப்பாட்டில் இருந்த பிள்ளைகள், வெளியுலகையே காணாத பிள்ளைகள், தனிமையில் செயற்பட்ட பிள்ளைகள் என பல்வேறு வகைப்பட்ட திறமைகளைத் தன்னகத்தே கொண்ட பிள்ளைகள் ஒன்றுசேருகின்ற போது, இவர்களை எல்லாம் அறிமுகப்படுத்தும் நிகழ்வே "ராகிங்" ஆகும என அதற்கு நியாயம் கற்பிக்கப்பட்டுவருகிறது. என்றாலும் இதனுடைய நோக்கம் இன்று பல்கலைக் கழகங்களில் திசைமாறிச் செல்வதை நாம் காணமுடிகிறது.

30-40 வருடங்களுக்கு முன்னர் பல்கலைக்கழகக் கல்வியில் மேற்கொள்ளப்படும் இச்செயற்பாடுகள் தொடர்பாக யாரும் அலட்டிக் கொள்ளவில்லை. ஆனால், தற்போது கனிஷ்ட மாணவர்கள் மீது சிரேஷ்ட மாணவர்களால் மேற்கொள்ளப்படும் அடக்குமுறை, அட்டகாசமானது, கல்வி உலகால் ஏற்றுக்கொள்ள முடியாத அளவுக்கு பல விமர்சனங்களைத் தோற்றுவித்துள்ளது.

ஏதாவது ஒரு வடிவத்தில், இலங்கையிலுள்ள அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும் பகிடிவதை தொடர்ந்து நடந்து கொண்டுதான் இருக்கிறது. கிழக்கிலங்கையின் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கிழக்குப் பல்கலைக்கழகத்தில் அண்மையில் நடைபெற்ற பகிடிவதை சமூக வலைத்தளங்களில் பேசுபொருளாகியது. பர்தா அணிந்துள்ள முஸ்லிம் மாணவிகள் மீது, ஆண் மாணவர்கள் சேற்று நீரை வாரி இறைக்கும் அநாகரிகமான காணொளிப் பதிவொன்று, சமூக ஊடகங்களில் வெளியாகியபோது, அந்தக் காணொளியைப் பார்த்த பலரும் தமது கோபங்களையும் ஆத்திரத்தையும் விமர்சினங்களையும் கடுமையான சொற்களால் பதிவு செய்திருந்தனர். அந்தப் பகிடிவதைச் செயற்பாடு ஒழுக்கத்தையும் பண்பாட்டையும் மதிக்கும் பலரையும் பெரும் அதிர்ச்சியில் ஆழ்த்தியது.

ஒவ்வொரு பெற்றோரும், தமது பிள்ளைகளை மிகுந்த கஷ்டங்களுக்கும் சிரமங்களுக்கும் மத்தியில் வளர்த்தெடுக்கிறார்கள்; படிக்கவைக்கிறார்கள். அவர்களை ஒரு நல்ல நிலைமைக்கு கொண்டுவருவதற்காக அவர்கள் என்னென்ன கனவுகளைக் காண்கிறார்கள். தமது பிள்ளைகள் பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவானதும், அந்தப் பெற்றோரின் கனவு பெரும்பாலும் நிறைவேறிவிட்டதாகவே உணர்கிறார்கள். தங்கள் குழந்தைகளை கரைசேர்த்துவிட்டோம், எதிர்காலத்தில் முதுமையின் போது, நன்கு கவனிப்பார்கள், இனி எமது தயவின்றி நாங்கள் இல்லாத காலத்தில் வாழ்வார்கள் என்று, தமது வாழ்க்கையின் திருப்தியினை உணர்கிறார்கள். ஆனால், அந்தப் பிள்ளைகளில் ஒரு குறிப்பிட்ட தொகையினர் தமது எதிர்காலத்தையும், இலட்சியத்தினையும் மறந்தவர்களாக, சில அற்ப ஆசைகளுக்குள் சிக்கி பலியாகிவிடுகிறார்கள்.

வாழ்க்கையின் எதிர்கால இலட்சியத்தை அடைவதற்காக பல்கலைக்கழகத்துக்குச் சென்ற போது, சட்டை அணிவது எப்படி என்று பகிடிவதை செய்யப்பட்டு, அது வைத்தியசாலை வரை அவளை கொண்டுசென்று விடுகின்றது என்றால், நிலைமை எந்தளவுக்கு மோசமாகியிருக்கிறது என்று அறிய முடிகிறதல்லவா!

பல உயிர்களைக் காவு கொண்டுள்ள பகிடிவதையை மேற்கொள்ள வேண்டும் என்ற தீர்மானத்துக்கு மாணவர்கள் வரக் காரணம் என்ன? "நிபுணர்கள் சிலர் மேற்கொண்ட ஆய்வுகளில், பகிடிவதை செய்யும் மாணவர்களிடையே பொதுவான அறிகுறிகள் சில காணப்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அதில் முதலாவது, தாழ்வு மனப்பான்மையாகும். இது, ஜாதி, வறுமை, சமூக அந்தஸ்து குறைவடைதல், உடற்றகுதி குறைதல் போன்றவற்றால் ஏற்படக்கூடும். இந்த நிலைமையை Body dysmorphic conditions என்று கூறலாம். அடுத்ததாக, சமூகவிரோத ஆளுமை, அல்லது வரம்புநிலை மனவளரிச்சியைக் குறிப்பிடலாம்.

இவை தவிர, சிறு வயதிலேயே தாய்வழி அல்லது தந்தைவழிப் பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்திருத்தல், ஏழ்மையான சுயமரியாதை, ஏனையோர் மத்தியில் தன்னை பிரபல்யப்படுத்த எண்ணுதல், தன் மீதான சுய வெறுப்பும் சமூகம் மீதான வைராக்கியமும், சமூகத்திலிருந்து ஒதுக்கப்படலும் அதனை மூடி மறைக்க

எண்ணுதலும், எதிர்முனைகளையுடைய சிந்தனைகள், பச்சாதாப பற்றாக்குறை மற்றும் வலியேற்படுத்தல் மூலம் இன்பம் காணுதல் போன்ற பொதுவான குணாதிசயங்கள், பகிடிவதை மேற்கொள்ளும் மாணவர்களிடத்தில் உள்ளதாக ஆய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது. இவ்வாறான பிரச்சினைகள் உள்ளவர்களே, பகிடிவதைகளில் பெரும் ஆர்வம் செலுத்துகின்றனர் எனவும் ஆய்வறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.

இந்தப் பகிடிவதை தொடர்பில் கருத்துத் தெரிவித்துள்ள, இயல்பியலாளரும் எழுத்தாளருமான பேராசிரியர் சந்திம கோமஸ், "கடந்த மூன்று தசாப்த காலங்களில், ஐரோப்பா மற்றும் கனடா உள்ளிட்ட நாடுகளிலுள்ள உயர் பல்கலைக்கழகங்களுக்கும் ஆபிரிக்கா மற்றும் பங்களாதேஷ் நாடுகளிலுள்ள மிகவும் ஏழ்மையான பல்கலைக்கழகங்களுக்கும் சென்றுள்ளேன். ஆனால், இலங்கையில் காணப்படும் சித்திரவதையில் இன்பம் காணும் கொடூர மனப்பான்மையை, அந்நாடுகளில் நான் காணவில்லை. இலங்கை பல்கலைக்கழகங்களில் காணப்படும் இந்த பகிடிவதையின் பின்புலத்தையும் அதற்கு அடிமையானவர்களின் மனோநிலையையும் ஆய்வுக்கு உட்படுத்தினால், சமூக விஞ்ஞானம் மற்றும் உளவியல் ஆராய்ச்சிக் கட்டுரைகள் நான்கினை எழுதக்கூடிய தரவுகள் கிட்டும்" என்றும் சுட்டிக்காட்டியுள்ளார். (http://www.tamilmirror.lk/172043/2016-05-12-05-17-06)

பல நாடுகளில் மாணவர்கள் கற்பதற்காக பல்கலைக்கழகம் சென்று, கற்கைத் துறையை சரிவர மேற்கொண்டு, நிலாவுக்கும் செல்கிறார்கள். ஆனால், நமது நாட்டில் பகிடிவதை தொடர்பாகப் பதிவாகியுள்ள அறிக்கைகளைப் பார்க்கும் போது, மிகுந்த வேதனையளிக்கிறது. பல்களைக்கழக மாணவர் மீது, அரசும் நாட்டு மக்களும் எதிர்ப்பார்ப்பவைகளும், வேண்டி நிற்பவைகளும் மிக அதிகமாகும். ஆயினும், இவ்வெதிர்பார்ப்புக்களையும், பொறுப்புக்களையும் நிறைவேற்றக் கூடிய நாகரிகமான, கல்வி ஞானம் பெற்ற, பண்பாடுள்ள கல்விமான்களையும், புத்திஜீவிகளையும் உருவாக்குவதற்குத் தற்போதைய பல்கலைக்கழக அமைப்பு முறைகள் போதுமானவையா எனும் வினா எழுவது தவிர்க்க முடியாததாகும்.

அதியுயர் கல்வி நிறுவனமாக மதிக்கப்படும் பல்கலைக்கழக அமைப்புக்களில் இன்று அதிதீவிரமாக ஒரு தொற்று வியாதியைப் போன்று, பரவி வருவது பகிடிவதை என்று சொல்லப்படும் சித்திரவதையாகும்.

**பதவிளக்கம்:** பல்கலைக்கழகத்தில் பட்டப் படிப்பைத் தொடர புதிதாகச் சேர்ந்தவர்களைத் தொந்தரவு செய்கின்ற சில்மிஷமமான 'ராகிங்' (RAGGING) என்ற ஆங்கிலப் பதம் பகிடிவதை செய்தலையே குறிக்கிறது. அத்தோடு, நையப்புடைப்பு, அவமானப்படுத்தல் எனும் பல்வகைப் பொருளையும் தருகிறது. சிங்கள மொழியில் *'நவகவதய'* என்ற சொல்லே ராகிங்குப் பயன்படுத்தப்படுகிறது.

புகிடிவதை, பிரித்தானிய பல்கலைக்கழகங்களிலேயே அறிமுகமாகி இன்று உலகின் பல பல்கலைக்கழகங்களிலும் நடைமுறையில் உள்ளது என்று கருதப்படுகிறது. எனினும், இதன் தோற்றம் பற்றி வேறு சிந்தனைகளும் உள்ளது.

'ராகிங்' செய்வதன் நோக்கம் புதியவர்களை (JUNIORS) பழையவர்கள் (SENIORS) சித்திரவதை செய்வதல்ல, பாலியல் கொடுமை விளைவிப்பதல்ல, மானசீகப் பாதிப்பை ஏற்படுத்துவதல்ல. கூச்சப் பண்பு கொண்ட மாணவர்களின் ஒதுங்கூக்கத்தை இல்லாதொழித்தலே, மேலை நாடுகளில் பகிடிவதையாக உள்ளது.

தமாஷாக நடந்து, கனிஷ்ட மாணவர்களை சிரிக்க வைத்து, நகையாடுவதே பகிடிவதையின் விளக்கமாக இருந்தாலும் இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் 'ராகிங்' கொடூர உயிர் கொல்லி நோயாக விஷ வடிவம் பெற்றுவிட்டது.

பகிடிவதை அல்லது பகடிவதை (Ragging, ரேகிங்) என்பது பாடசாலைகளிலும் கல்லூரிகளிலும் உடல், உள ரீதியாகப் புதிய மாணவர்கள் பழைய மாணவர்களால் துன்புறுத்தப்படுவதாகும். புதியவர்களை உள்வாங்குவதற்காகச் செய்யப்படுவது என்று கூறப்படும் இந்நடவடிக்கையால் புதியவர்கள் மோசமான பாதிப்புக்களை அடைவதுண்டு. இந்தப் பகடி வதை தொடக்கக் காலத்தில் புதியவர்களுடன் நட்பு ஏற்படுத்திக் கொள்ளும் நோக்கத்துடன் இருந்தாலும் காலப்போக்கில் இது வன்முறைச் செயல்களுக்கும் குற்றங்களுக்கும் வித்திட்டுள்ளது. பகிடிவதை பன்னெடுங்காலமாக நடைபெற்று வருகிறது. பதினெட்டாம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் மிகப் பரவியிருந்ததாகக் கூறப்படுகிறது.

பகிடிவதை பொதுவாக மூன்று வகைப்படுகிறது.

- **உள துன்புறுத்தல்**
- **உடல் ரீதியான துன்புறுத்தல்**
- **பாலியல் ரீதியான துன்புறுத்தல்**

சில மாணவர்கள் தற்கொலை வரை செல்ல பகிடிவதையே காரணம் எனப்படுகிறது. உடல்ரீதியான துன்புறுத்தல் இறப்புக்கும் காரணமாவதுண்டு. இலங்கையில் வரப்பிரகாஷ் என்ற மாணவனின் மரணம் இத்தகையதொரு சம்பவமாகும். இந்தியாவில் , பகடிவதையால் ஏற்பட்ட ஒரு கொலைச் சம்பவமாகும். இந்தியாவில் பகடி வதை செய்வது தடை செய்யப்பட்டுள்ளது.

"பகிடிவதை என்பது, சிரேஷ்ட மாணவர்களால் புதிய மாணவர்கள் மீது திணிக்கப்படும் உடல், உள ரீதியான துன்புறுத்தலாகும். ஆரம்ப காலத்தில், புதியவர்களுடன் நட்பை ஏற்படுத்திக்கொள்ளும் நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பகிடிவதை, பிற்காலத்தில் வன்முறைச் செயல்களுக்கும் குற்றங்களுக்கும் வித்திட்டது. பதினெட்டாம் நூற்றாண்டில் இங்கிலாந்திலேயே ஆரம்பிக்கப்பட்டு, பெருமளவில் பரவியிருந்ததாகக் கூறப்படுகிறது. இருப்பினும், தற்போது இந்தியா மற்றும் இலங்கை போன்ற நாடுகளிலேயே பெருமளவில் பின்பற்றப்பட்டு வருகின்றது எனலாம். இதனால், சில மாணவர்கள் தற்கொலை வரை செல்கின்ற நிலைமையும் உண்டு. உடல் ரீதியான துன்புறுத்தல்களால் இலங்கையில் நாம் வரப்பிரகாஷை இழந்தது போல, இந்தியாவில் நாவரசு என்ற மாணவனும் உயிரிழந்தான்." **Menaka Mookandi (** 2016 ) என தனது கட்டுரையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

**நோக்கம்:** பல்வேறு தரப்பட்ட மொழி, நிற, இன, கலாசார நாகரிக பண்பாட்டுப் பழக்க வழக்கங்களையும், குணாதிசயங்களையும் கொண்ட மாணவரிடையே பரஸ்பரம் புரிந்துணர்வை ஏற்படுத்தி பல்கலைகழக வாழ்வுக்கும், புதிய உயர்கல்விச் சூழலுக்கும் அவர்களைப் பழக்கவழக்கப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு அறிமுகப்படுத்தப்பட்டதே (RAGGING) 'பகிடிவதை' என்று அதை நியாயப்படுத்தும் படித்த பலரால் முன்வைக்கப்படும் கருத்தாக உள்ளது.

"பல்கலைக்கழகத்துக்குத் தெரிவாகும் மாணவர்களிடையே உள்ள கூச்ச சுபாவத்தைப் போக்குவதற்காகவும் மாணவர்களிடையே காணப்படும் ஏற்றத்தாழ்வினைப் போக்கி, அவர்களிடையே ஒரு சுமூகமான நெருக்கத்தை ஏற்படுத்துவதற்கும், பொறாமை போன்ற அற்ப உளப் பிரச்சினைகளைப் போக்குவதற்குமே, அந்தக் காலத்தில் பல்கலைக்கழகங்களில் "ராக்கிங" என்ற செயற்பாடு நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டது.

வறிய மாணவனொருவன், பல்கலைக்கழகத்துக்குள் செல்லும் போது, அங்கிருக்கும் வசதி படைத்த மாணவர்கள் முன்னால் "காதல் கொண்டேன்" தனுஷ் ஸ்டைலில் கூனிக்குறுகி நிற்பான். அவன் மனதில், தான்

வறுமையானவன் என்ற எண்ணமும் தயக்கமும் ஊட்டுறுவி இருக்கும். இவ்வாறான ஏற்றத்தாழ்வினைப் போக்கி, அனைத்து மாணவர்களும் சரிசமம் என்ற நிலையை மாணவர்கள் மனங்களில் புகுத்தப்பட வேண்டும் என்ற நல்ல எண்ணத்தில் தான் இந்தப் பகிடிவதை உருவானதாகக் கூறப்படுகிறது. இவ்வாறான, நல்ல எண்ணத்தில் உருவாக்கப்பட்ட ஒரு விடயம், இன்று எவ்வாறு எம்மாணவர்களை நாசமாக்குகிறது என்பதை சொல்லித் தெரிய வேண்டியதில்லை" என **Menaka Mookandi /** 2016 குறிப்பிடுகின்றார்.

இலங்கையில், பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி பெறும் மாணவர்களில் 20 சதவீதத்தினர், தமது படிப்பை நடுவில் கைவிடுவதாகவும், அவர்களில் 10ல் இருந்து 12 சதவீதத்தினர் பகிடி வதையை (ராகிங்) சகிக்க முடியாமல் வீடுகளுக்குத் திரும்பியுள்ளனர் எனவும், (முன்னாள்) ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அண்மையில் நடைபெற்ற நிகழ்வொன்றில் தெரிவித்தார். ', (முன்னாள்) ஜனாதிபதி கூறியதைவைத்துப் பார்த்தால், இந்த ஆண்டு அனுமதி பெற்ற மாணவர்களில் சுமார் 3000 பேர், பகிடிவதை காரணமாக படிப்பை இடைநிறுத்தியுள்ளதாக பொருள்கொள்ள முடிகிறது. இது அதிர்ச்சி தரும் எண்ணிக்கையாகும்" என bbc தமிழ் குறிப்பிட்டுள்ளது.

அண்மையில் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பகிடிவதையில் ஈடுபட்ட 15 மாணவர்கள் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் அஜர்படுத்தப்பட்டு தற்போது, விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். இந்த செய்தி நமது நாட்டு ஊடகங்களில் முக்கிய இடத்தை வகித்தது. பேராதனை பல்கலைக்கழகத்தின் விவசாய பீடத்தில் முதலாம் ஆண்டுக்கு நுழைவைப் பெற்றுள்ள புதிய மாணவர்களில் எட்டுப் பேரை அதே பீடத்தைச் சேர்ந்த இரண்டாம் வகுப்பு மாணவர்கள் சிலர் பீடத்திற்கு அருகாமையிலுள்ள வீடொன்றில் தடுத்து வைத்து, பகிடிவதைக்கு உட்படுத்தியுள்ளனர். இச்செய்தி அறிந்த பல்கலைக்கழக ஒழுக்காற்று மேற்பார்வைக் குழு விஷேட பொலிஸ் குழுவொன்றை இஸ்தலத்திற்கு அனுப்பியது. இரவு ஒரு மணியளவில் குறித்த வீட்டை சுற்றி வளைத்த பொலிஸ் குழுவினர் பகிடிவதையை மேற்கொண்டனர் என்ற சந்தேகத்தின் பேரில் 15 பேரைக் கைது செய்து அவர்களை நீதிமன்றில் ஆஜர் செய்து, விளக்கமறியலில் வைத்துள்ளனர். அதேநேரம் பகிடிவதைக்கு உள்ளான மாணவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு அறிக்கை பெறப்பட்டுள்ளது. இதேவேளை தம் பிள்ளைகள் நிர்வாணப்படுத்தப்பட்டு மிக மோசமான முறையில் பகிடிவதை செய்யப்பட்டு உள்ளனர் என்று பகிடிவதைக்கு உள்ளான மாணவர்களின் பெற்றோர் பொலிஸில் புகார் தெரிவித்துள்ளனர்.

"...1974 ஆம் ஆண்டில் இன்றைய களனி பல்லைக்கழகமாக விளங்கும் அன்றைய வித்தியாலங்காரப் பல்கலைக்கழகத்தில் சில கணிதப் பாட பயிற்சி ஆசிரியர்கள் பகிடிவதைக்கு உட்படுத்தப்பட்டமைக்கு எதிராக அன்றைய அரசாங்கம் விஷேட ஆணைக்குழுவொன்றை நியமித்து மேற்கொண்ட விசாரணையின் அடிப்படையில் 12 பட்டதாரி மாணவர்கள் பல்கலைக்கழகத்தில் இருந்து வெளியேற்றப்பட்டதோடு, நான்கு அதிகாரிகளுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கையும் எடுக்கப்பட்டது.

இதுவே, இந்நாட்டில் பகிடிவதைக்கு எதிராக அரசாங்கம் மேற்கொண்ட முதல் நடவடிக்கையாகும். ஆனால், 1975ஆம் ஆண்டில் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பகிடிவதையுடன் தொடர்பான முதலாவது மரணம் விவசாய பீடத்தில் இடம்பெற்றது.

இதேபோன்று 1997 இல் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீட மாணவர் எஸ். வரப்பிரகாஷ் என்ற மாணவர் பகிடிவதை காரணமாகக் கொல்லப்பட்டார். இவ்வாறு பல உயிர்களை இப்பகிடிவதை காவு கொண்டிருக்கின்றது. அதனால், இச்செயற்பாட்டைக் கட்டுப்படுத்தும் நோக்கில் சட்ட ஏற்பாடுகள் கடுமைப்படுத்தப்பட்டுள்ளன. இருந்தும் அவற்றையும் மீறி இச்செயற்பாடுகள் இடம்பெறுகின்றன..."
(தினகரன் /2017/02/22)

பகிடிவதை தொடர்பாக பதிவாகியுள்ள கொடூரமான சம்பவங்களுள் 1997ம் ஆண்டில் பேராதனைப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ரூபா ரத்னசீலி என்ற மாணவி மிகவும் கவலையான விதத்தில் உயிரிழந்தார். அந்த மாணவி இராமநாதன் மண்டபத்தில் மேல் மாடியிலிருந்து குதித்துப் பாய்ந்ததிலிருந்து, துஷார – கெளும் உயிர்துறக்கும் வரை நீண்டு செல்கிறது.

Kamanthi Wikramasinghe ஆங்கிலத்தில் எழுதிய கட்டுரையில் Dharsha வுக்கு நடந்த செக்சுவல் கொடுமையைக் குறிப்பிடும் படிஷகிடிவதையைப் படிக்கும் போது, கண்கள் பனித்துவிட்டன.

**Dharsha's horrific memories** : In a 34-minute video, Dharsha explained the brutal experience he had to face. Excerpts of his revelation follow:

When we started university, the seniors spoke to us in a very loving manner and even our parents were surprised. But things changed thereafter. This incident happened in Room no. 114 at the Meddawatte Hostel. One day we slept at around 2.00am. Around 10 of us sleep on one bench. During the wee hours of the night a group of them came calling us 'Malliye' in a weird tone. I was also asleep and when I woke up none of my roommates were there. Thereafter they dragged me out of the bench, asked me to strip and queezed all my organs. I was helpless and I was scared to the extent that I couldn't even scream. Then they put us on a bed and one of them got on to my backside and later only I realised what they had done. They had taken a condom, put it on a pole and pressed it onto my butt. Then they put it in our mouth as well. We were then put into a common room where all of us were naked. Later only I realised that those noises were being made by my colleagues.

Physical rags continue for two weeks. There are different rituals. One is 'Bonchi kadeema' where two people have to stand facing each other, naked and touch each other's sexual organs. In addition to that we have to put it up and down until there's a noise and have to continue until they ask us to stop. Another one is called 'puk kapuwo allanawa' where we have to do something like catching bugs with our private parts. The 'Rajasinghe amudey' is where we have to repeat a verse, word-to-word and if we miss a word they would hit us. After this episode I fell sick and got myself tested for HIV because I had a fear. My friends also observed a change in me. Once I informed the UGC they asked me to attend another university, but that wasn't the solution I was looking for. What affected me the most was the sudden demise of my mother, who went through unbearable stress after listening to my stories. In the end I lost my mother, but I would like to ask them whether they gained anything from it.

Following the incident, the Matara Police took 19 suspects into custody and they will be further remanded till August 19.

ஒரு சமுதாயம் சீராக அமைவதற்கு இரண்டு அம்சங்கள் அடிப்படையாக அமைகிறது.

1. **அறிவு**

2. **நல்லொழுக்கம்**

அறிவிற் சிறந்தோராகவும், நல்லொழுக்கமுடையோராகவும், நற்பண்புமிக்கோராகவும், உள்ள மாணவர்களைக் கொண்ட சமுதாயமே செம்மையான நற்சமுதாயம்.

இன்றைய உயர் கல்வி நிறுவனங்களான பல்கலைக்கழகங்களில் போதிக்கப்டும் நவீன கல்வித்திட்டங்கள் பதவிகளுக்கும், பரீட்சைகளுக்குமென தயாரிக்கப்பட்டது. கல்வி நிறுவனங்கள் வெறுமனே உத்தியோகத்தஉகளை தயாரிக்கும் ஆலைகளாக இயங்கி வருவதால், கல்வி கற்கும் மாணவர்களிடம் பண்பாட்டையும், ஒழுக்கத்தையும், நாம் காண முடியாதுள்ளது. உள்ளத்தை பண்படுத்தாத, அன்மிக வறுமை மிக்க கல்வித்திட்டத்தினால் மாணவர்கள் கொலைஞர்களாகவும், பல்கலைக்கழகங்கள் பலிபீடங்களாகவும் மாறியுள்ளன.

சட்டத்திலுள்ள ஓட்டைகளினாலும், பல்கலைக்கழக நிர்வாக அமைப்புக்களின் கையாலாகாத தன்மையினாலும், பாதுகாப்பு அதிகாரிகளின் செயற்திறனற்ற போக்கினாலும் பகிடிவதையினை பூச்சிய நிலைக்குக் கொண்டுவருதல் என்பது இதுவரை சாத்தியமற்றதாகக் காணப்படுகிறது.

பல்கலைக்கழகங்களில் கற்கும் மாணவர்களை ஏனைய சாதாரண மாணவர்கள் போன்று நோக்கப்படுவதில்லை. அதனால், பல்கலைக்கழக மாணவர்கள் பண்பு முதிர்ச்சி மிக்கவர்களாக செயற்பட வேண்டியவர்கள். இத்தகைய சமூக அந்தஸ்தை சிதைக்கும் வண்ணம் பகிடிவதை என்ற பெயரில் காட்டுமிராண்டிகளைப் போன்று நடந்து கொள்வது மனிதாபிமானத்திற்கும் மனித விழுமியங்களுக்கும் அப்பாலான செயலாகவே பார்க்கப்படுகிறது.

இன்று பதிவாகிவரும் கொடூர பகிடிவதைகள், பல்கலைக்கழக மாணவர்கள் தொடர்பில் மக்களிடம் காணப்படும் நல்லபிப்பிராயத்தை குறைக்க வழிவகுத்துள்ளது. ஒரு சிலர் செய்யும் பிழையான செயற்பாடுகளால் பல்கலைகழகத்தில் கல்வி பயிலும் அனைத்து மாணவர்களுக்குமே மக்கள் மத்தியில் அபகீர்த்தி ஏற்படுகின்றது. ஆகவே, ஒழுக்க விழுமியங்களுக்கு அப்பாற்பட்ட, மனிதாபிமானமற்ற, மிருகத்தனமான பகிடிவதையை மாணவர்கள் மனது வைத்தால் முற்றாகக் கட்டுப்படுத்த முடியும்.

மாணவர் இளம் சமுதாயத்தை அறிவுடையோராகவும், நற்பண்புடையோராகவும் உருவாக்குவதில் கல்விச் சாலையான பல்கலைக்கழகங்களுக்கு சமமாகவோ, உயர்வாகவோ வேறெதுவும் இருந்திடல் இயலாது! முடியாது!! எனவே, உயர் கல்விபெறும் பல்கலைக்கழக மாணவர்கள் தனது கவ்ரவத்தையும் பல்கலைக்கழகத்தின் அந்தஸ்தையும் பாதுகாக்க வேண்டிய முக்கிய பொறுப்புக்குரியவர்கள்.

எமது சமூகவமைப்பிலுள்ள குற்றங்களைக் களைந்து, ஒரு நாகரிகமான சமூகவமைப்பிலிருந்து மாணவர்களையும், பல்கலைக்கழக நிர்வாக அமைப்புக்களையும் மீள் கட்டமைப்புக்கும் சீரமைப்புக்கும் உருவாக்கும் போதே, பகிடிவதையை பெருமளவு குறைக்க முடியும்.

(அண்மையில் வெளிவந்த கட்டுரையாசிரியரின் பகிடிவதை என்ற நூலிலிருந்து. . .)

**நூலை பெற்றுக் கொள்ளும் இடங்கள்**

இஸ்லாமிக் புக் ஹவ்ஸ் – கொழும்பு
இக்ரா புத்தக நிலையம் – கொழும்பு
இஸ்லாமிக் புக் சென்டர் – அக்குரணை